செ.வெ.எண். 07/நவம்பர் தேதி : 03.11.2016

**தருமபுரி அரசு ITI–ல் (முழுநேர) ஒப்பந்த பயிற்றுநர் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

தருமபுரி மாவட்டம், கடகத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள (Wireman) கம்பியாள் தொழிற் பிரிவுக்கு தொகுப்பூதியம் ரூ.10000/- அடிப்படையில் ஒரு (முழுநேர) ஒப்பந்த பயிற்றுநர் பதவிக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த (அருந்ததியர்) இன மகளிர் முன்னுரிமைப் பதிவர் ஆதரவற்ற விதவை (SCA-Priority(Women)/DW) இன சுழற்சியின்படி) . நிரப்பப்படவுள்ளது. தகுதி உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. முறையான பள்ளிப்படிப்பில் 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் ஈராண்டு கம்பியாள் தொழிற் பிரிவில் NTC/NAC சான்று பெற்றிருக்க வேண்டும். கம்பியாள் பிரிவில் (NTC) - தேசிய தொழிற் சான்றிதழ் கல்வி தகுதிக்கு 3 வருட முன் அனுபவமும், கம்பியாள் பிரிவில் (NAC) - தேசிய தொழிற் பழகுநர் கல்வி தகுதிக்கு 2 வருட முன் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். குறைந்த பட்ச வயது 01.07.2016 அன்று 18 வயது நிறைவடைந்திருக்க வேண்டும்.

தகுதியான நபர்கள் சுயவிபரம் அடங்கிய புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பங்கள் கல்வித்தகுதி, வயது, சாதி மற்றும் உரிய சான்று நகல்களுடன் சுயமுகவரியிட்ட தபால் தலை ஒட்டப்பட்ட உறையுடன் (Self addressed stamped envelope) தொலைபேசி எண்களுடன் **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 11.11.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் முதல்வர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் கடகத்தூர் செல்லியம்பட்டி அஞ்சல் பாப்பாரப்பட்டி வழி தருமபுரி-636809 என்ற முகவரிக்கு** வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் தேர்வு குழுவினரால் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுடைய நபர்களுக்கு மட்டும் நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் **கடிதம்** அனுப்பப்படும்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.